# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் மஹிமை உணராதார் வைணவர்களில் எவரும் இருக்க முடியாது. உலகியல் பிரார்த்தனைகள் செய்பவர்களுக்கும், ஞானம் பக்தி வைராக்யம் முற்றியவர்களுக்கும் இந்த ஸ்தோத்ரம் இன்றியமையாதது. ஸ்ரீபராசரபட்டரால் உரை எழுதப்பட்ட பெருமையுடையது. இதைப் பாண்டவர்களுக்குக் கண்ணபிரான் சன்னிதியில் உபதேசித்ததனால் பீஷ்மருக்கு பீஷ்மாசாரியர் என்ற அந்தஸ்து கிடைத்தது. அம்புப் படுக்கையில் படுத்தவாறு அவர் கொடுத்த மரண வாக்குமூலம் தான் இந்த ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம். அவர் அம்புப் படுக்கையில் படுத்திருந்தது தான் அனைவருக்கும் தெரியுமே தவிர அவர் ஏன் அப்படிப் படுத்திருந்தார் என்பது ஒரு சிலருக்கே தெரியும். கங்கா புத்திரரான அவருடைய காயம்பட்ட உடல் மண்ணில் வீழ்ந்து புரளக் கூடாது என்ற வீர சிந்தனையோடு அர்ஜுனன் ஏற்படுத்திக் கொடுத்த அந்த சரதல்பத்தில் அவர் படுத்துக் காத்துக்கிடந்தது அயன மாற்றத்துக்காக.

கண்ணன் கீதையில் சொன்னபடி உத்தராயண காலத்தில் உடலை விட்டு நீங்கும் ஆத்மா நற்கதியடையும். பீஷ்மர் அடிபட்ட நாள் தக்ஷிணாயன காலம். அதாவது சூரியனுடைய தென்திசைப் போக்கு நடந்து கொண்டிருந்த காலம். உத்தராயண காலமாகிய வடதிசைப் போக்கு ஆராம்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவர் அப்படிக் காத்திருந்தார். உத்தராயண காலம் ஆரம்பிக்கும் நாள் தான் மகரஸங்கராந்தி. மகர ராசிக்குள் சூரியன் பிரவேசிக்கும் காலம்! சோதிடக் கணக்குப்படி ஆதவன் ஒவ்வொரு ராசியினும் ஒருமாத காலம் சஞ்சரிக்கிறான். மேஷம் தொடங்கி மீனம் வரை மாதத்திற்கு 30 டிகிரி வீதம் 360 டிகிரி அவன் பயணிக்கிறான். ஆனால் மேஷ சங்க்ராந்தியென்றோ ரிஷப சங்க்ராந்தியென்றோ விசேஷமாக யாரும் குறிப்பிடுவதில்லை. மகர ஸங்கராந்தியன்றையதினம் சூரிய நாராயணனுக்கு சிறப்பான வழிபாடுகள் செய்து அவனுக்கு திருப்தி ஏற்படுத்துவது இந்து மதத்தினர் அனைவருக்கும் கடமை. சூரிய வம்சத்தில் பிறந்ததாலும், சூரிய நாராயணனுடைய அருள் இருந்ததாலும் தான் இக்ஷ்வாகு, திலீபன், பகீரதன், தசரதன், ராமன் என்று ஒவ்வொருவரும் தேவர்களும் அஞ்சும்படியான சாதனைகளைச் செய்தார்கள். வைதிக மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் ஒவ்வொருவரும் மகர ஸங்கராந்தியை வேத உணர்வோடு அனுஷ்டிக்க வேண்டும்.

அதைப் 'பொங்கல் திருநாள்' என்றோ, 'உழவர் திருநாள்' என்றோ, 'தமிழர் திருநாள்' என்றோ, குறிப்பிடுவது ஆதாரமற்றது. தை பிறந்தால், தமிழனுக்கு மட்டும் தான் வழி பிறக்குமா? தமிழ் நாட்டில் மட்டும் தான் பொங்கல் பொங்குவதும் உழவர்கள் மகிழ்வதும் நடக்குமா? பிற மொழி பேசும் மற்ற மாநிலங்களில் பயிர் விளைக்கவில்லையா? அறுவடை செய்யவில்லையா? பாரத தேசம் 20க்கும் மேற்பட்ட மாநிலப் பிரிவுகள் கொண்டதாய் இருந்தாலும் எத்தனையோ மொழிகள் பேசப்பட்டாலும் இந்திய கலாச்சாரம் என்பது ஒன்று தான். அமாவாசையும் பௌர்ணமியும் ஆதித்ய ஹ்ருதயமும் அதைக் கொடுத்த ராமாயணமும் காஷ்மீர் தொடங்கி கன்யாகுமரி வரை அனைவருக்கும் பொது.

சூரியமான வருஷம், சந்திரமான வருஷம், சாலி வாகன வருஷம், என்று ஜோதிடர்கள் பல

வகையாக ஆண்டுகளைப் பிரித்தாலும் அவற்றுக்கெல்லாம் புராணப் பாரம்பரியம் உண்டு. அவற்றைக் கடை பிடிப்பதால் புண்ணியமும் உண்டு. தை முதல் தேதியை புத்தாண்டு தினமாகக் கொண்டாட நமக்கு மட்டும் எந்தவிதமான பாரம்பரியமும் இல்லை. புதிதாக ஒரு பாரம்பரியத்தை உண்டு பண்ண நாம் முனிவர்களும் அல்லோம்.

வடநாட்டு க்ஷத்ரியனான அர்ஜுனன் தென்னாட்டு பவளக் கொடியை க்ஷத்ரியப்ரியன் என்பதற்காக மணந்து கொண்டான். காரணம் பாஷைகள் மாறினாலும் பண்பாடு ஒன்று தான். இந்துமதியின் சுயம்வரத்திற்கு பாண்டிய மன்னன் போயிருந்ததாக காளிதாஸன் குறிப்பிடுகிறான். ஏனென்றால் பேசும் மொழி வேறானாலும் கடைப்பிடிக்கும் மதக் கலாச்சாரம் ஒன்றுதான். இப்படிப் பிரிவற்ற அகண்ட பாரதமாய் விரிந்து கிடந்த வைதிகப் பண்பாட்டை, வடக்கு தெற்கு என்று கூறி பிளவு படுத்தி தமிழனைத் தனிமை படுத்தினால் அதனால் நஷ்டம் அடைவது தமிழனே தவிர எஞ்சிய இந்தியர்கள் அல்லர்.

அகத்தியர் தெற்கே வந்தார். தமிழுக்கு இலக்கணம் கண்டார். தமிழ் மொழியை வளர்த்தார். ஆனால் அவர் வடமொழியையோ, வைதிக பாரம்பரியத்தையோ வெறுக்கவில்லை. கங்கையின் சரித்திரத்தில் அவர்க்கும் பங்குண்டு. ராமனுக்கு அஸ்த்ரம் கொடுத்து உதவியதில் அவரும் ஒருவர். ஆதித்ய ஹ்ருதயத்தை ராமனுக்கு உபதேசித்ததே அவர் தானே! அவர் தென்மொழி வடமொழி என்று பேதம் பார்த்தாரா? தன் சுயநலத்துக்காகத் தமிழ் மொழியின் பெயரைச் சொல்லி வயிறு வளர்க்கும் துர்புத்தி அவருக்கு இல்லை. தமிழ் இனத்தை இந்திய நீரோட்டத்திலிருந்து பிரித்து அவன் முன்னேற்றத்தை இருட்டாக்கும் காரியத்தை அவர் செய்யவில்லை. ஏனென்றால் தமிழும் தமிழனும் வாழ வேண்டும் என்று அவர் நினைத்தார்.

சீதையைத் தேடுவதற்கு அனுமனை அனுப்பிய சுக்ரீவன் பேச்சிலும், இலங்கை போய் வந்த அனுமனின் பேச்சிலும் தமிழகத்தைப் பற்றி உயர்வான கருத்துக்களை வால்மீகி ராமாயணத்தில் காணப்படுகின்றன. அவர்கள் தெற்கு வடக்கு என்று பேதம் பார்க்கவில்லை.

ஆதி சங்கரர், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீமத்வாசாரியார் ஆகிய முப்பெரும் மதத் தலைவர்களும் தென்னிந்தியர்கள் தாம்! ஆனால் அவர்கள் த்வேஷம் பாராட்டாமல் வடமொழி வேதங்களையும் இதிகாசங்களையும் கரைகண்டதனால் தான் அவர்களுடைய கோட்பாடுகள் இந்திய எல்லைகளைக் கடந்து உலகெங்கிலும் முழங்கிக் கொண்டிருக்கின்றன. **ஆ நோ भद्राः** என்பர் ஆன்றோர்; நல்ல கருத்துக்கள் எங்கிருந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அறிவு என்பது சாதி மொழி பேதங்களைக் கடந்தது. "பிச்சைபுகினும் கற்கை நன்றே" என்றனர் பெரியோர். தர்மவியாதன் என்ற கசாப்புக் கடைக்காரனிடம் பெரிய பெரிய முனிவர்களும் தலை வணங்கி ஞானம் கற்றுக் கொண்டார்கள். நமக்கு பயன் தான் முக்கியம். பாகுபாடுகள் அல்ல.

உலக வரலாற்றிலே முன்னேற்றம் அடைந்த சமுதாயங்கள் அனைத்துமே குறுகிய மனப்பான்மையைக் கைவிட்டு, பரந்த மனப்பான்மையோடு பல்வகைக் கல்விகளையும் ஏற்றுக் கொண்டு தான் உயர்ந்திருக்கின்றன. ரோமானியப் பேரரசு எகிப்திய சாம்ராஜ்யம், அசோகர் ஆட்சி இவை எல்லாமே சாதி மொழி பிரிவினைகளைக் கடந்து முன்னேற்றத்துக்கு மட்டுமே முக்கியத்வம் கொடுத்தன. ஆங்கிலப் பேரரசு அகிலமெங்கும் பரவி, இன்று ஆங்கிலம் உலகின் பல நாடுகளிலும் பேசப்படும் நிலைமையை அடைந்ததென்றால் அதற்கு அடிப்படைக் காரணம், பிறமொழிகளின் நல்ல விஷயங்களைக் கதவு திறந்து ஏற்றுக் கொண்டதுதான். "என்மொழி தனிமொழி" என்று அவர்கள் நினைத்திருந்தால் அவர்கள் இப்படி முன்னேறியிருக்க முடியாது. மனம் விரிந்தால் மகத்தான சாதனை புரியலாம்.